செ.வெ.எண்:74 /செப்டம்பர்/2019 நாள்:20.09.2019

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம் - 2019-2020 தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---------------

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பணிக்கு செல்லும் மகளிர் (மாற்றுத் திறனாளிகள் உட்பட) மற்றும் திருநங்கைகளுக்கு, மறைந்த முன்னாள் முதல்வர் அம்மா அவர்களின் நினைவாக, இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் கீழ் நடப்பாண்டிற்கு (2019-2020-ஆம் ஆண்டிற்கு) மானிய விலையில் இருசக்கர வாகனங்கள் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் பயனாளிகளின் வயது வரம்பு குறைந்தது 18 முதல் அதிகபட்சமாக 40 வயதுக்கு மிகாமல் இருக்கவேண்டும். கல்வித்தகுதி குறைந்தபட்சம் 8-ஆம் வகுப்புதேர்ச்சி / தோல்வி பெற்றிருக்க வேண்டும். குடும்பத்தில், முக்கிய வருமானம் ஈட்டுபவராகவும், வருட வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். இரு சக்கரவாகன விலைமதிப்பில் 50% அல்லது அதிகபட்சமாக ரூ.25,000/- வரை மான்ய தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

விண்ணப்பிக்கும் பயனாளிகள் உரிய ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்கவேண்டும். பயனாளிகள் வாங்க கூடிய வாகனம் 01.01.2018 பிறகு தயாரிக்கப்பட்டு அதிகபட்சம் 125CC திறன் உடைய ஆட்டோகியர் மற்றும் கியர் இல்லாத இருசக்கர வாகனம் மட்டுமே வாங்கப்பட வேண்டும். இதற்காக, **20.09.2019 (வெள்ளிக்கிழமை)** முதல் விண்ணப்பங்கள் ஊரகப் பகுதிகளில் 14 வட்டார வளர்ச்சி அலுவலகங்கள், நகர்ப்புற பகுதிகளில் 16 பேரூராட்சி அலுவலகங்கள், 3 நகராட்சி அலுவலகங்கள் மற்றும் மாநகராட்சி பகுதிக்குட்பட்ட 4 மண்டல அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவம் தொடர்புடைய அனைத்து அலுவலகங்களிலும் இலவசமாக வழங்கப்படும். கடந்த ஆண்டு விண்ணப்பித்தவர்கள் தற்போது விண்ணப்பிக்கத் தேவையில்லை. உரிய விதிமுறைகளுக்குட்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ **30.09.2019**-ஆம் தேதி பிற்பகல் 5.00 மணிக்குள் மேற்கண்டுள்ள அலுவலகங்களுக்கு அனுப்பிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.